## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி

**அசல் வழக்கு எண்: 224 /2019** வா.சா.2

2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 18ம் நாள் செவ்வாய்கிழமை வாக்குமூலம் 1857ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்து வைக்கப்பட்டது.

**பெயர் : கருவப்பாண்டியன்** **தந்தை/கணவர் பெயர்: வெள்ளைச்சாமி**

**ஊர் :** **தாலுகா:**

**வயது :** **தொழில்:**

**ஜாதி :** **சமயம்:**

---

**18.02.2025 : <u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது தரப்பில் நிரூபண உறுதி கூற்றை தாக்கல் செய்கிறேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். நான் சொல்ல சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பி.வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. தாவா சொத்தின் சர்வே எண் 76/5 என நினைக்கிறேன். சரியாக ஞாபகமில்லை. தாவா சொத்து மூன்று உட்பிரிவுகளாக உள்ளது. தாவா சொத்திற்கு எஸ்எல்ஆர், யுடிஆர்-ல் பட்டா யார் பெயரில் இருந்தது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு காயம்பு, பால்பாண்டி ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டதால் தேவக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் வழக்கு நடந்தது என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி வழக்கில் தவறுதலாக ஏற்பட்ட பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் தெரியாது. இன்றைய தேதியில் தாவா சொத்துக்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. 50 வருடமாக வாதி அனுபவத்தில் இருந்தது. வாதிக்கு தாவா சொத்து பூர்வீக சொத்தா, கிரைய சொத்தா என்றால் தெரியாது. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க காயம்பு, பால்பாண்டி அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை வாதிகள் எந்த காலத்திலும் அனுபவிக்கவில்லை என்றாலும் வாதிகள் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி. முடிவுற்றது.